# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,932/2—1970 නොවැම්බර් 14 වැනි සෙනසුරාදා — 1970.11.14

14,932/2 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV — உள்ளூராட்சி

### உள்ளூராட்சி அறிவித்தல்கள்

L.D—B. 51/39/L.G.D/HC 1/1/1

**கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்**

**54 ஆம் பிரிவின் கீழான கட்டளை**

(257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 54 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பின்பற்றி, அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பீலிக்ஸ் றெஜினோல்ட் டயஸ் பண்டாரநாயக்க ஆகிய நான், குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த மாகோ கிராமப் பிரதேசத்தின் கிராமச்சபையிடம்—

(அ) தகுதியின்மையும் தகாத முகாமையும், அத்துடன்

(ஆ) மேற் சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தினால் அளிக்கப்பட்ட தத்துவங்களைத் தவறான வழியிற் பயன்படுத்தியமையும் ;

உள்ளன என்பதற்குப் போதிய சான்றுண்டெனத் திருப்திப்பட்டுள்ளமையால், இக்கட்டளைமூலம்—

(அ) மாகோ கிராமச் சபையைக் கலைக்கிறேன் ; அத்துடன்

(ஆ) புதியதொரு கிராமச் சபை இக்கிராமப் பிரதேசத்திற்கு அமைக்கப்பட்டுப் புதியதொரு தலைவர் தெரிவு செய்யப்படும்வரை, குருநாகல் உள்ளூராட்சி உதவி ஆணையாளரை அக்கிராமச்சபையின் அலுவல்களை நிருவகிக்கும்படி பணிக்கிறேன்.

ෆී. ආර්. ඩී. බණ්ඩාරණායක,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு, 14 நவம்பர் 1970.

11–703


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.